பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 01 2026 SATURDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. சுயசார்பு மற்றும் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா மாறுவதற்கு அடுத்த 20 ஆண்டுகள் மிகவும் முக்கியமானது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. மேற்குவங்க மாநிலத்தில் 3 ஆயிரத்து 250 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், புதிய ரயில்களையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

3. பிரதமர், இன்று அம்ரித் பாரத் ரயில்களை நாட்டிற்கு அர்ப்பணித்திருப்பதற்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துள்ளார்.

4. இந்தியா - கனடா இடையே பல்வேறு துறைகளில் உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

5. பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்பு திட்டம், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

- இனி விரிவான செய்திகள் -

>>>>><<<<<

சுயசார்பு மற்றும் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா மாறுவதற்கு அடுத்த 20 ஆண்டுகள் மிகவும் முக்கியமானது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

உத்ராகண்ட் மாநிலம், டேராடூனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகங்கள் முக்கியப் பங்காற்றி வருவதாக கூறினார்.

இளைஞர்களுக்கிடையே, நாட்டு பற்று குறித்த சிந்தனைகளை ஊக்குவிக்க அரசின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த செய்திகளை ஊடகங்கள் வெளியிட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், ரயில், சாலை, மின்சாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் உத்ராகண்ட் வளர்ச்சியடைந்து வருவதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில் 3 ஆயிரத்து 250 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், புதிய ரயில்களையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

மேற்குவங்க மாநிலம், மால்டாவில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியா, வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கும் என்று தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது படுக்கை வசதியுடன் கூடிய வந்தேபாரத் ரயில் சேவையை தொடங்கி வைத்தது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

மேற்குவங்க மாநிலம், New Jalpaiguri-யிலிருந்து நாகர்கோவில் மற்றும் திருச்சிராப்பள்ளிக்கு அம்ரித் பாரத் ரயில் சேவைகளையும் பிரதமர் இந்நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அம்ரித் பாரத் ரயில்களை நாட்டிற்கு அர்ப்பணித்திருப்பதற்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துள்ளார்.

*சமூகவலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், புதிதாக தயாரிக்கப்பட்ட 4 அம்ரித் பாரத் விரைவு ரயில்களை பிரதமர் இன்று நாட்டிற்கு அர்ப்பணித்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*தமிழகம் – மேற்குவங்கம் இடையேயான பகுதிகளை இணைக்கும் வகையில் இரண்டு அம்ரித் பாரத் ரயில்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*தொழில் மற்றும் ஏனைய பயணங்களை மேற்கொள்ளும் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் இந்த ரயில் சேவை அமைந்துள்ளதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*நாட்டில் நலத்திட்டங்களை செயல்படுத்த நிதி பற்றாக்குறை இல்லை என்று மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.*

*மத்தியப்பிரதேசம், Vidisha -வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஏழைகளுக்கும், விவசாயிகளுக்கும் பெருமளவிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.*

*இந்நிகழ்ச்சியின் போது, புதிய சாலை திட்டங்களுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கு திரு. நிதின் கட்கரி அடிக்கல் நாட்டினார்.*

*>>>>><<<<<*

*இந்தியா - கனடா இடையே, பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.*

கனடாவின் *British Columbia* மாகாண முதல்வர் திரு. *David Eby*-யுடன் ஆலோசனை மேற்கொண்ட பின், அமைச்சர் சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், தொழில்நுட்பம், உற்பத்தி, கனிமவளம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வர்த்தகத்தையும், முதலீட்டையும் அதிகரிக்க பேச்சுக்கள் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் தொடர்ந்து ஒத்துழைப்பதென முடிவெடுக்கப்பட்டதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

எகிப்து நாட்டில் வாழும் இந்தியர்கள், இருநாட்டு உறவுகளை மேம்படுத்த முக்கியப் பங்காற்றி வருவதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் உள்ள இந்தியர்களுடன் பட்டம் விடும் திருவிழாவில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. *Badr Abdelatty*-யுடன் இருநாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக கூறினார்.

வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலா, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

காணும் பொங்கல் இன்று தமிழகம் முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் பொதுமக்கள் அதிக அளவில் கூடியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – குமார் 48 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்பு திட்டம், இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம், கோட்டயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் திட்டங்களின் பயன்கள், அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்ற முனைப்போடு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கேரள மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கு மாநில அரசு போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கூறிய திரு. ஜார்ஜ் குரியன், மத்திய அரசின் திட்டங்களையும் திறம்பட செயல்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

கைவினை பொருட்களை உற்பத்தி செய்யும் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், பிரதமரின் விஸ்வகர்மா கலைப்பொருள் கண்காட்சி நாளை புதுதில்லியில் தொடங்குகிறது.

மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. ஜித்தன் ராம் மாஞ்சி, இந்த கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்.

நாட்டில் உள்ள பாரம்பரிய கைவினைக் கலைஞர்கள் தயாரித்த பொருட்களை மக்களிடையே எடுத்துச் செல்லும் நோக்கில், இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைவினைப் பொருட்களுக்கான சந்தையை உருவாக்கித் தரவும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கைவினைப் பொருட்களை விற்பனை

செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரும் நோக்கிலும், இந்த திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

நாளை நடைபெறவுள்ள கண்காட்சியில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து 117க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் தங்களது கலைப்பொருட்களை கண்காட்சியில் பார்வைக்கு வைத்து, விற்பனை செய்யவுள்ளனார்.

பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் மூலம், கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டு வருவதாகவும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை கூறியுள்ளது.

>>>>><<<<<

ஆப்பிள் இறக்குமதியை ஜூலை மாதத்திலிருந்து, நவம்பர் மாதம் வரை தடை செய்ய வேண்டும் என்று ஹிமாச்சலப்பிரதேச முதலமைச்சர் திரு. *Thakur Sukhvinder Singh* மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலை சந்தித்துப் பேசிய அவர், பிற மாதங்களில், ஆப்பிள் பழத்திற்கான இறக்குமதி வரி 100 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஹிமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டரை லட்சம் விவசாயிகளின் கவலைகளை அமைச்சரிடம் திரு. *Thakur Sukhvinder Singh* எடுத்துரைத்தார்.

>>>>><<<<<

உத்தரபிரதேசம் மாநிலம், *Bijnor*-ல் ஆற்றில் டால்ஃபின்களின் கணக்கெடுப்பு இன்று தொடங்கியுள்ளது.

*மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் சார்பில் நடைபெறும் இந்த கணக்கெடுப்பு, இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.*

*முதல்கட்டமாக, கங்கா நதியில் Bijnor முதல் கங்காசாஹர் வரையிலும், இரண்டாவது கட்டமாக பிரம்மபுத்ரா, சுந்தர்பன் உள்ளிட்ட பகுதிகளிலும் இந்த கணக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*டால்ஃபின்களை பாதுகாக்க இந்த கணக்கெடுப்பு மிகவும் உதவிடும் என்றும் அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*தாய்லாந்து சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் Neil Oberleitner இணை பட்டம் வென்றது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-3, 7-6 என்ற செட்கணக்கில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – ஜப்பானின் Takeru Yuziki இணையை வென்றது.*

*>>>>><<<<<*

*சென்னை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - ராம்குமார் ராமநாதன் இணை பட்டம் வென்றது.*

*இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 4-6, 6-3, 10-8 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Prajwal Dev – Nitin Kumar Sinha இணையை வென்றது.*

*>>>>><<<<<*

*19 வயதுக்குபட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியாவுக்கு எதிராக 239 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும்*

*பங்களாதேஷ் அணி சற்றுமுன்வரை. 12 . ஓவரில் . . 2 . . விக்கெட் இழப்புக்கு . . 63 . . ரன் எடுத்துள்ளது.*

*Bulawayo-வில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா 48 புள்ளி 4 ஓவரில் 238 ரன் எடுத்தது.*

*முன்னதாக, மழை காரணமாக ஆட்டம் 49 ஓவராக குறைக்கப்பட்டது.*

*>>>>><<<<<*

*மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணிக்கு எதிராக டாஸ் வென்ற பெங்களுரு அணி, முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.*

*நவிமும்பையில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.*

*>>>>>end<<<<<*